Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 6, No.2, 2025, (71-80)

# சித்தர் இலக்கியம் கூறும் கருவளர்ச்சி

## Siddha literature says fertility

**B. Periyaswamy***

Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College
Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India

email: periyaswamydeva@gmail.com

**Corresponding author: B. Periyaswamy*

**Received:** 29 Sept. 2025; **Revised:** 30 Nov 2025; **Accepted:** 08 Dec 2025; **Published:** 18 Dec 2025

**To cite this article (APA):** Periyaswamy, B. (2025). சித்தர் இலக்கியம் கூறும் கருவளர்ச்சி: Siddha literature says fertility. Journal of Valartamil, 6(2), 71-80. https://doi.org/10.37134/jvt.vol6.2.8.2025

## ஆய்வுச்சுருக்கம்

தமிழரின் பாரம்பரிய மருத்துவ முறையான சித்த மருத்துவம் இன்று பயன்பாட்டில் இருந்து குறைந்து வருவதை நாம் அறியலாம். பல்வேறு நோய்களுக்கும் எளிய முறையில் தீர்வளிக்கக் கூடிய இம்மருத்துவ முறை மீண்டும் எழுச்சியுற வேண்டும். அதனடிப்படையில் இக்கட்டுரை, சித்தர்கள் பற்றியும், சித்த மருத்துவக் காலம் பற்றியும், சித்த மருத்துவம் குறித்தும், மனிதனின் உடலமைப்புக்கேற்ற மருத்துவம் சித்த மருத்துவம் என்பதையும் விளக்கியுள்ளது. ஆண்களிடம் காமம் மிகுவிக்க பெண்கள் கையாண்ட உத்திகள், கரு உண்டாகும் முறைமைகள், கருவில் இருப்பதில் ஆணா? பெண்ணா? என அறிந்த முறைகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. அறிவியல் திறம் குரோமோசோம்களின் அடிப்படையிலும் தாயின் மூச்சின் அடிப்படையில் எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் சங்ககாலத்திலேயே சோதனை குழாய் கருத்தரிக்கும் முறை இருந்தது என்பதும். அவ்வாறு பிறந்த குழந்தை முருகன் என்பது உள்ளிட்ட செய்திகளை இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது.

**கருச்சொற்கள்:** சித்தர், சித்தர் இலக்கியம், கருவளர்ச்சி, சோதனைக் குழாய், சித்த மருத்துவம்

**Abstract:** We can learn that the traditional medical system of the Tamils, Siddha medicine, is declining in use today. There is a need to revive this system of medicine which can cure many diseases in a simple way. Accordingly, this article explains about the Siddhas, the era of Siddha medicine, Siddha medicine, and Siddha medicine for the human body. What are the methods of fertilization, the methods of fertilization, the man in the womb, the woman's tactics of lust for men? A woman? This article also examines the known methods. How scientific ability was based on chromosomes and the breath of the mother and the conception of the test tube was there in the Sangam age itself. This article examines the news in detail, including the fact that the child was born Murugan.

**Keywords:** Siddha, Siddha literature, Embryology, Test tube, Siddha medicine

## ஆய்வின் நோக்கம்

சித்தர் இலக்கியத்தில் இருக்கும் கருவளர்ச்சி பற்றிய கருத்துக்களை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## ஆய்வு அணுகுமுறை

இக்கட்டுரை சமூகவியல் மற்றும் விளக்கவியல் ஆய்வு அணுகுமுறையை மையமாகக் கொண்டு விளங்குகிறது.

## பகுப்பாய்வு முறை

சித்தர் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு நவீன அறிவியல் கருதுகளுடன் (XX/YY க்ரோமோசங்கள், IVF, ஜீன்) ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்துள்ளது. சுவாசத்தின் அடிப்படையில் பாலினத்தை கணிக்கும் முறை, கருவளர்ச்சியின் படிநிலைகள் ஆகியவற்றை சித்த மருத்துவத்தின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## தரவுகள் சேகரிப்பு முறை

தரவுகள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என்ற இரண்டு வகையில் சேகரிக்கப்பட்டுள்ளன. அதில் திருமூலரின் திருமந்திரம் முதன்மை ஆதாரமாகவும், பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய இலக்கிய நூல்களும், ந. சண்முகவடிவின் சித்தர்கள் காட்டும் சமுதாயம், சி.கோ. தெய்வநாயகத்தின் சித்தர் சிந்தனைகள், ந. வெங்கடேசனின் சித்தர் இலக்கியங்களில் வாழ்வியல் ஆகியன துணைமை ஆதாரமாகவும் கொண்டு தரவுகளைத் திரட்டி இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. எனவே, இது நூலக ஆய்வு மற்றும் இலக்கிய ஆய்வை சார்ந்தது**.**

## ஆய்வுச் சிக்கல்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சித்த மருத்துவம் கருவளர்ச்சி குறித்து எவ்வாறு துல்லியமான பார்வையைக் கையாண்டுள்ளது எனும் சிக்கலை மையமாகக் கொண்டு ஆராய முற்படுகிறது.

## முன்னுரை

சித்தர் இலக்கியங்கள் என்பவை மிகப்பெரிய கருவூலமாகும். இது மருத்துவம், மானிடம், வாழ்வியல், இறைநெறி என அனைத்தையும் நமக்கு கற்பிக்கக் கூடியவைகள். சாதி, மதம், இனம் ஆகியவற்றை எல்லாம் கடந்து மனித நேயத்தை வளர்ப்பவை. இறை என்பது அன்பின் வழிபட்டது என்பதை உணர்த்துபவை. இவ்வாறான சித்தர் இலக்கியத்தில் பயின்று வந்துள்ள மருத்துவத்தில் பெண்களின் கருவளர்ச்சி பற்றியும் அதன் இயல்பை பற்றியும் எடுத்துக் கூறியுள்ளவற்றை விரிவாக காணலாம்.

## சித்தர்

சித்தர்கள் என்பவர்கள் ஞானம் பெற்றவர்கள். இதனை,

> ***சித் என்றால் அறிவு சித்த உடையவர்கள் என்று பொருள் கொடு சித்தி பெற்றவரே சித்தர் எனவும் மெய்ஞானிகள் எனவும் அழைக்கலாம் கடவுளைக் காண முயல்பவர்களை பக்தர் என்றும் கண்டு களித்தவர்களை சித்தர்கள் என்றும் தேவாரம் வேறுபடுத்தி காட்டுகிறது (சித்தர் இல க்கியங்களில் வாழ்வியல், தொ.1, ப.1)***

எனக் கூறுகின்றனர்.

## சித்தர் மொழி

ஞானியார் வீட்டையும் ஞானத்தையும் அடைவதற்கு சிவனை தமிழ் ஒளியால் மொழியால் வாழ்த்து துதித்து நிற்பர் என்பதை இப்பாடல் எடுத்துரைக்கின்றது. எனவே சித்தர்களின் மொழி தமிழ் என்பதும் அதுவே முக்தியையும் ஞானத்தையும் அளிக்க வல்லது என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தார்கள் என்பதையும்,

> **முக்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை**
> **எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை**
> **நெய்தலை பால்போல் நிமலனும் அங்குளன்**
> **அத்தகு சோதியது விரும்பாரன்றே.**

( திருமந்திரம், ஏழாம் தந்திரம், 38. இந்தோபதேசம், பா.13)

என்று திருமந்திரம் நமக்கு எடுத்துரைக்கின்றது.

சித்தர்கள் பயன்படுத்திய மொழி வடிவத்தை நாம் சங்கேத மொழி அல்லது குறியீட்டு மொழி வடிவம் என்கிறோம். இதனை திருமூலர் சூனிய சம்பாஷனை என்கிறார். இது பொதுவாக ஆழ்ந்த பொருளைக் கொண்டதாக அமைந்திருக்கும். இது பாடலின் பொருளை உள்வாங்கி பயன்படுத்த தெரியாதவர்கள் அதனை தவறாக பயன்படுத்தி விட்டால் ஆபத்துக்கள் உண்டாகும் வாய்ப்புகள் உண்டு என்பதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

**நந்தி முதலாக நாட்டினர் நாலுபேர்**
**எந்தை இதற்கு என்ன உபாயம் என்றிடிற்**
**சிந்தை தனைத் தெளிவித்து சீவணை**
**வந்த வினையை அறமாற்றும் வாமமே.**
**(திருமந்திரம், பா.2898)**

பாடலுக்கு வெளிப்படையான பொருளை மேலோட்டமாக பார்த்தால் நந்தி தேவரை முதன்மை ஆசாரியாக கொண்ட நான்கு சீடர்கள் (சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்) என் தந்தையே (குருவே) பிறவி துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி என்று கேட்டால். மனதை தெளிவடைய செய்து உயிர் வாழும் வழியை போதித்து நம்மை பற்றி இருக்கும் கர்ம வினைகளை அறவே நீக்கும் வழியே உண்மை சுத்தியாகும் என்று கூறுவது போல பக்தி நெறியை எடுத்துரைத்துள்ளது. இதனை, ஆழ்ந்து நோக்கினால் இதன் மறைபொருள், மூலாதாரத்தில் இருந்து எழும் பிராண சக்தியானது நான்கு வேறுபட்ட பாதைகளில் (நாடிகளில்) செலுத்தப்படுகிறது. பிராண சக்தியானது தலைக்கு ஏறுவதற்கும் அதை சீர் செய்வதற்கும் உள்ள வழி என்னவென்றால் மூச்சுக்காற்றை இடகலை (வாமம்) மற்றும் பிங்கலை (வலது) நாடிகளில் வழியாக செலுத்தி மனதை ஒருமுகப்படுத்தி சீவன் (பிராண வாயு) உள்ளே சுழலும் நிலையை புரிய வைக்கும் உடலில் உள்ள நச்சுக்களை நீக்கி வினைகளை அறுக்கும் இடகலை (வாமநாடி) வழியாக செய்யப்படும் பிராணயாமம் பயிற்சியை சிறந்த வழியாகும் என்று யோகத்தை பற்றி எடுத்துரைக்கிறது.

எனவே சித்தர் பாடல்கள் மறைமொழியால் ஆனவை என்பதை அறிய முடிகிறது.

## சித்த மருத்துவ தோற்றம்

சித்த மருத்துவம் தோன்றிய காலத்தை நம்மால் அறுதியிட்டு கூற இயலாது. மனிதன் எப்போது தம் வாழ்வில் இலைகளையும், காய்களையும், பழங்களையும் பற்றி அறிந்துக் கொண்டானோ அன்றே சித்த மருத்துவம் தோன்றியது எனலாம். சித்த மருத்துவம் எனவே உணவே மருந்து, மருந்தே உணவு எனும் நிலையிலானது. இதனை,

> ***காடுகளிலும் மலைகளிலும் காலத்தைக் கழித்த பெரியோர்களாகிய சித்தர்கள் உயிர் வளர்க்கும் யோக நெறியுடன், மானுட உடலினைச் சார்ந்த தட்பவெப்ப நெறியுடன் அதன் மாறுபாடுகளையும், மூச்சோடு உட்சென்று உடலில் மறைந்து வளரும் நச்சுயிர் அணுக்களின் இயல்பினையும், வெளியுலகில் நிலவும் கொடிய கிருமிகளின் தாக்குதல்களையும், தேள் பாம்பு போன்ற நச்சுயிர்களால் மக்களுக்கு உண்டாகும் கொடுமைகளையும் உடல் உறுப்புகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் நரம்பு நெகழ்ச்சி, தசைப் பிறழ்ச்சி, எலும்பு முறிவு போன்ற குறைபாடுகளையும் தீர்க்கும் மருந்துகளை ஆய்ந்து கண்டறிந்தனர். (சி.கோ. தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள், ப.46)***

*என்று கூறுவதிலிருந்து அறிவியல் முறைபடி ஒவ்வொரு நோய்க்கும் சித்தர்கள் மருந்துகளைக் கண்டறிந்தனர் என்பதை அறியலாம். மேலும்,*

> ***சித்த மருத்துவத்தின் முதல் நிலை உடலறிவதாகும். மனித உடலின் அகம், புறம் ஆகியவற்றை அறிந்து தெளிவாக உணர்ந்த சித்தர்கள் வெளியே அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது எனும் தத்துவ அடிப்படையில் ஆராய்ந்தனர். (சி.கோ. தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள், ப.48)***

சித்தர் தம் மருத்துவம் என்பது உடல் நோய் நீங்க மட்டும் மருந்தினைக் கொடுக்காமல் மனநோய் நீங்கவும் மருந்தினைக் கொடுப்பதாகும். மனநோய் நீங்கினால் உடல்நோயும் நீங்கும் என்பதை அறிந்துள்ளனர் என்பதை நாம் இதிலிருந்து பெறலாம்.

## சித்த மருத்துவம் விளக்கம்

'சித்தம்' என்பது மனம் என்றும், மனத்தைத் தன்பாற்படுத்தும் திறமை என்றும் பொருள்படும். உடலுறுப்புகள் அனைத்தையும் மனம் அடக்கும். அந்த மனத்தை அடக்கி ஆளும் திறன் படைத்தவர்கள் சித்தர்கள்.

இவர்கள் இயற்கை பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கிய மருத்துவம் என்பதால் இது 'சித்த மருத்துவம்' எனப்பட்டது.

> **சித்த மருத்துவம் காப்பு, நீக்கம், நிறைப்பு என்ற மூன்றினுள் அடங்கும். வருமுன் காப்பதும், வந்தபின் முயல்வதும், வரக்கூடும் என்ற அறிகுறியின் போதே இல்லது இட்டு நிரப்புவனமாக அமையும் இம்மருத்துவ முறை, மருந்து தரப்படும் முறைமைக்கு 'மருத்துவம்' என்று பெயராயிற்று. அதாவது உடல்நலம் பேணும் வகையினை உணர்த்துவது. (ந. வடிவுக்கரசி, சித்தர்கள் காட்டும் சமுதாயம், ப.155)**

உடலுக்கும் மனதிற்கும் உறுதி கொடுக்கும் மூலிகைகளையும் உலோகங்களையும் ஆராய்ந்து அவற்றின் முடிவாகக் கிடைத்ததே சித்த மருத்துவ முறை ஆகும். இதனைப் பற்றி விரிவாக ஆராய்வதால் தமிழரின் மருத்துவ அறிவியல் அறிவு புலப்படும். இது தமிழ்நாட்டவரால் ஆராய்ந்து உருவாக்கப்பட்ட தனி மருத்துவம். இவர்கள் பஸ்பம், செந்தூரம், திராவகம் முதலியவற்றைக் கொண்டு மருந்துகள் உண்டாக்கினர்.

**மனித உடலமைப்பு**

மனித உடல் நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு ஆகிய பருப்பொருட்களுடன் உயிர் என்ற நுண்பொருள் சேர்ந்து ஐம்பெரும் பூதத்து இயற்கையாக இயங்குகின்றது. ஐம்பெரும் பூதங்களில் மாற்றம் ஏற்படும்போது உலகத்து இயற்கையிலும் மாறுதல் நிகழ்ந்தது. அதைப்போலவே ஐம்பெரும் பூதங்களால் உருவான உடலில் மாற்றம் ஏற்படுவதால் நுண்பொருளான உயிரும் உடலும் கெடுகின்றது. இதனை,

> **உரமடிமேதினி யுந்தியி லப்பாம்**
> **விரவவிய தன்முலை மேவிக்கு மூங்கி**
> **கருமுலை மீமிசை சைக்கீழிற் காலாம்**
> **விரவிய கந்தர மேல்வெளியாமே (திருமந்திரம், 289)**

என்ற பாடலில் திருமூலர் உடலானது ஐம்பெரும்பூத பருப்பொருட்களால் ஆனதை எடுத்துகாட்டுகின்றார்.

**காமம் மிகுதல்**

காதலும் காமமும் மனித வாழ்வில் இரண்டற கலந்தவை. காமத்தூண்டலே அடுத்த தலைமுறை உருவாக்கத்தில் முக்கிமானது. அந்த காமத்தூண்டலுக்கு தலைவனை தன்வயமாக்கலுக்கு பல்வேறு

உத்திகளைப் பெண்கள் கையாண்டனர். அவற்றுள் ஒன்று தொய்யில் எழுதுதல். இதனை,

> **சங்க நூல்களில் தொய்யில் எழுதும் முறை மகளிரிடையே பரவலாகக் காணப்பட்டது. திண்ணிய வயிரத்தையுடையதை அரிய சந்தனத்தை மருதப் பூவுடன் கலந்து இளமுலை மீது தடவி அதன் ஈரம் புலருமுன்னே வேங்கை மலரின் நுண்ணிய தாதை அப்பி, மேலே விளவின் சிறிய தளிரைக்கிள்ளி முலையின் மீது தடவுவர். (திருமுருகு. ப. 30).**

என்பதிலிருந்து அறியலாம். இவ்வாறு செய்வதால் பெண்கள் தம் அழகை மிகுவித்து, ஆண்களின் காமம் தூண்டப்படும் என்று கருதினர்.

**கரு**

ஆணும் பெண்ணும் இணைவதால், இரண்டு செல்களின் இணைவு அல்லது இணைவு ஒரு புதிய படைப்பாக விளைகிறது. ஒரு பெண்ணின் பிறப்புறுப்பில் ஆயிரக்கணக்கான விந்துகள் நுழைகின்றன அவற்றுள் கருமுட்டையில் நுழையும் ஒரு விந்துதான் குழந்தையின் பாலினத்தின் காரணமாகும். தாயின் வயிற்றில் உருவாகும் கரு பத்து மாத காலத்திற்குப் பிறகு முழுமையாக வளர்ச்சியடைந்த குழந்தையாக உருவாகிறது. கரு குழந்தையாக பிறக்கும் வரை அவளது கருப்பை ஒரு முதன்மை வீடாகவும், பாலூட்டும் பொருளாகவும் செயல்படுகிறது. உடல் ரீதியாக, தாய் உடலில் பல மாற்றங்கள் இக்காலக்கட்டத்தில் நிகழ்கின்றன.

**கருவை தோற்றுவித்தல்**

ஓர் உயிர் கருப்பையில் தோற்றும்போது, அதன் முன்னை தூல உடன்போடு ஞானேந்திரியம், கன்மேந்திரியம், பூதம், சத்தாதி விடையம், வாசனாதி என்னும் வகையில் இருபத்தைந்தையும் மீள அவற்றிற்கு தூக்கம உடம்பினின்றும் அக்கருவினைக் கருப்பையினுள் தோற்றுவிப்பான். இக்கருத்து,

> **ஆக்குகின்றான் முன் பிரிந்த இருபத்தஞ்**
> **சாக்குகின்றானவன் ஆதிளம் ஆருயிர்**
> **ஆக்குகின் றான் அவன் ஆவ தறிந்தே (திருமந்திரம், 451)**

எனும் பாடல் புலப்படுத்துகிறது.

**கருவுறுதலும் உடல் இயக்கமும்**

மனிதனின் 23 சோடி குரோமோசோம்களில், 1 சோடி குரோமோசோம்களே குழந்தையின் பாலினத்தை நிர்ணயிக்கின்றன.

பெண்ணுக்குரிய குரோமோசோம் (XX) என்றமைப்பிலும், ஆணுக்குரிய குரோமோசோம் (XY) என்ற அமைப்பிலும் காணப்படும். ஆணிடமிருந்து வெளியேற்றப்படும் விந்துகளில் எது சூலை அடைந்து கருவாக உருவாகின்றதோ, அதனடிப்படையில் பாலினம் நிர்ணயம் செய்யப்படும். X குரோமோசோம் சூலை அடைந்தால் XX எனும் பெண் குழந்தையும், Y குரோமோசோம் சூலை அடைந்தால் XY எனும் ஆண் குழந்தையும் பிறக்கும். இதனை,

**“ஆண் மிகில் ஆணாகும் பெண் மிகிற் பெண்ணாகும்**
**பூணிரன் டொத்துப் பொருந்தில் அலியாகும்**
**தான்முகு மாகில் தரணி முழுதாகும்**
**பாணவ மிக்கிடிற் பாய்ந்தது மில்லையே” (திருமந்திரம் 478)**

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

குழந்தைகள் பெற்றோரின் இயல்புகளைப் பெற்றிருக்கும் என்பதை தற்காலத்தில் ஜீன் என்று அழைக்கின்றனர். இதனைத் திருமூலர்,

**“ஏய் அங்கு அலந்த இருவர்தம் சாய்த்துப்**
**பாயும் கருவும் உருவாம் எனப்பல**
**காயம் கலந்து காணப் பதிந்தபின்**
**மாயம் கலந்த ஆனதே” (திருமந்திரம் 268)**

என்று கூறியுள்ளார்.

**கருவமைவும், தாயின் உடற்கூறும்**

தற்கால விஞ்ஞான உலகில் வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று அறிவதற்கு பல்வேறு வசதி வாய்ப்புகள் வந்துவிட்டன. ஆனால், இவ்வாய்ப்புகள் எவையும் இல்லாத காலத்திலேயே வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என நம் முன்னோர் அறிந்திருந்தனர். கருவுற்றிருக்கும் பெண் மூச்சு விடும் நாசியின் பக்கங்களை வைத்தும், எந்த கையை ஊன்றி மேலே எழுகிறார் என்பதை வைத்தும் கணித்தனர். இதனை,

***ஆணா! பெண்ணா! என்று பால் வேறுபாடு அறிய புணர்ச்சியின் போது பிராணவாயு வலது நாசியில் இயங்கினால், பிறப்பது ஆணாகும். இடது நாசியில் இயங்கினால் பெண்ணாகும். அப்படி இன்றி அந்நிலையில் பிராண வாயுவை அபான வாயு எதிர்த்தவருக்கு இரட்டைக் குழந்தை பிறக்கும். பிராண வாயு இரு மூக்கிலும் இயங்கினால் பிறப்பது அலியாகும்.*** (திருமந்திரம், 482)

என்று திருமூலர் தம் திருமந்திரத்தில் கூறியுள்ளார். மேலும், குறையில்லா குழந்தை பெற,

> ***கருவமையும் போதும், கரு வளரும் போதும் தாயின் வயிறு மலம், சிறுநீர் மிகாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் பிறக்கும் குழந்தை ஊமை, குருடு, செவிடாக இல்லாமல் அறிவுடன் விளங்கும்.*** (திருமந்திரம், 1941)

என்றும் கூறியுள்ளார். எனவே சித்தர்கள் உருவாக்கிய சித்த மருத்துவமானது இன்றைய அலோபதி உள்ளிட்ட மருத்துவத்தைக் காட்டிலும் சிறந்தது. வாழ்வியலோடு இணைந்தது. பின் விளைவுகள், பக்க விளைவுகள் அற்றது. இன்றைய வேகமான கணினி யுகத்தில் நாம் உணவுகளையே வேகமாக எடுத்துக்கொள்ள முனையும் போது சித்த மருத்துவம் என்பது உணவையே மருந்தாகக் கூறியது. எனவே இனியாவது சித்த மருத்துவத்தின் மகத்துவத்தை உணர்ந்து நம் பாரம்பரிய முறைப்படி மருத்துகளை எடுத்துக் கொண்டு நோயின்றி வாழ வேண்டும்.

## சோதனைக் குழாய் மருத்துவம்

அதிவேக மருத்துவ அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று பல்வேறு நாடுகளிலும் IVF எனும் செயற்கை குழந்தைகள் பெறும் வசதிக்கான மருத்துவ மையங்கள் பல்கிப் பெருகிவிட்டன. இதற்கான காரணங்கள் என்ன என்றும் நாம் எப்போதாவது சிந்தித்தது உண்டா? நம் உணவு, உடை, உறக்கம் இவற்றில் ஏற்பட்ட மாற்றமே இவற்றின் அடிப்படை. இன்றைய காலத்தில் ஒரு பெண்ணின் கருவை மற்றொரு பெண்தாங்கி பெற்றுத்தருகிறாள். அவளுக்கு வாடகை தாய் என்று பெயர். என்னவொரு கொடுமை, பெற்றுக்கொள்பவள் வாடகைத் தாய் வளர்ப்பவள் தாய். இது இன்று மட்டுமல்ல பலநூற்றாண்டுகளுக்கு முன்பும் நடந்துள்ளது. இதனை,

> **“ தடவுநிமிர் முத்தீப்பேணிய மன்எச்சில்
> வடவயின் விளங்கு ஆல்உறை எழுமகளிருள்
> கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
> அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்
> மறுஆறு கற்பின் மாதவர் மனைவியர்
> நிறைவயின் வழாஅது நிற்சூலினரே
> நிவற்து ஓங்கு இமயத்து நீலப்பைஞ்சுனைப்
> பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்” (பரிபாடல், 5(42 -49))**

எனும் பாரிபாடல் கூறுகின்றது. சிவபெருமானும் உமாதேவியும் கூடி இன்புற்றதால் உண்டாகிய கருவினைக் கார்த்திகை மகளிர் அறுவரும் உண்டு கருவுற்றனர்.

## முடிவுரை

சித்தர் இலக்கியங்கள் நம் வாழ்வியல் சார்ந்தவை. இவைகள் மனித இனத்தின் வளர்ச்சியையும், நோயற்ற வாழ்வையும் நோக்கமாகக் கொண்டவைகள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பர். தற்கால மருந்துவமுறைகள் நோய்க்கான மருந்துகளை மட்டுமே அளிக்கின்றனர். ஆனால் சித்த மருத்துவம் உடலில் தோன்றும் நோயின் மூலம் மனநோயே எனவே மனிதனின் மனம் மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும் என்கின்றது. சித்தர்கள் சித்தை கைவரப் பெற்றவர்கள். அதாவது, மனதை அடக்கியாளும் தன்மை பெற்றவர்கள். இவர்கள் கண்டறிந்த மருத்துவ முறையினையே நாம் சித்த மருத்துவம் என்கிறோம். இம்மருத்துவத்தில் கருவளர்ச்சி பற்றியும் அக்கருவில் இருப்பது ஆணா? பெண்ணா? என அறிவது பற்றியும் கூறியுள்ள திறம் சிறப்பானவைகள். மேலும், குறையற்ற குழைந்தை பெறுவதற்கான வழியையும் நமக்கு எடுத்துரைத்துள்ளனர். சோதனை குழாய் முறையை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கொண்டு சித்த மருத்துவம் கருவளர்ச்சி பற்றிய உயர்ந்த அறிவியல் பார்வை கொண்டிருப்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

## Supplementary Table of Contents

Shanmugavadivu. N., Siddhas Show Community, Mani Offset, Chennai, 2007.
Deivanayagam. C.G., Siddhas Thoughts, Manivasagar Publishing House, Chennai, 1998.
Parimelazhagar (Text), Paribadal, Commercial Printing House, Chennai, 1918.
Manickam (U.A.), Thirumanthiram, Varthamanan Publishing House, Chennai, 2001.
Mohan. I., (Text), Pathuppattu, New Century Book House, Chennai, 2007.
Venkatesan. N., Siddha Literature in Life (Volume-1), Annamalai University, Chidambaram, 2014.